மின்னிதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM තේසියම්

Smart Fly
ARUN WINGS
TRAVELS & TOURS
கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com

மலர்: 0[illegible] | குரல்: 152 | வள்ளுவர் ஆண்டு 2054 | வெள்ளிக்கிழமை 16.02.2024 | பக்கங்கள் 10



## தர்மமே மறுபடியும் வெல்லும்: தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரின் பதிவு!

பக்கம்-02

## தமிழரசுக் கட்சிக்காக நீதிமன்றில் வாதாடுவேன்!

### ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் திட்டவட்டம்!



பக்கம்-02

## அநுரகுமார ஜனாதிபதியானால் அழுத்தம் காரணமாக தற்கொலை செய்துகொள்வார்:

### திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பி!



பக்கம்-07

### தமிழரசுக் கட்சி மாநாட்டை நடத்த யாழ் மாவட்ட நீதிமன்றம் தடையுத்தரவு!



பக்கம்-03

## பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை தரம் உயர்த்தப்பட வேண்டும்!

பக்கம்-06



ROLEX HOTEL
360, Galle Road, Wellawatte,Colombo06.
Tel: 011 2360462
ROLEX HOTEL
340, Hospital Road, Jaffna.
Tel: 021 2222808
E-mail: rolex.hotel@yahoo.com



# தர்மமே மறுபடியும் வெல்லும்: தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரின் பதிவு!

தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும் தர்மமே மறுபடியும் வெல்லும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் பதிவிட்டுள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெற இருந்த நிலையில் இரண்டு வாரங்களுக்கு இம்மாநாட்டை நடத்த இடைக்கால தடை விதித்து திருகோணமலை மாவட்ட நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வழக்கு திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் நேற்றையதினம் (15.02.2024) எடுத்துக்கொள்ளப் பட்டபோது 14 நாட்களுக்கு செயற்படும் வகையில் குறித்த இடைக்கால கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த வழக்கு மீண்டும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி திறந்த நீதிமன்றில் அழைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தமிழரசுக் கட்சிக்காக நீதிமன்றில் வாதாடுவேன்!

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் திட்டவட்டம்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகவும், கட்சியின் பொதுக் குழுக் கூட்டங்களின் முடிவுகளுக்கு எதிராகவும், யாழ்ப்பாணம், திருகோணமலை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு, இடைக்காலக் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ள வழக்குகள் சம்பந்தப்பட்ட விடயத்தில் கட்சியின் தலைவர்கள் கேட்டுக் கொண்டால் அவர்களுக்காக நீதிமன்றங்களில் முன்னிலையாகி அந்த வழக்குகளுக்கு எதிராக வாதாடுவேன்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்த வழக்குகள், கட்டளைகள் குறித்து இன்று காலையிலேயே கொழும்பில் கேள்விப்பட்டேன். திருகோணமலை வழக்கில் என் பெயரும் எதிராளியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக இப்போது அறிந்துள்ளேன். ஏனைய எதிராளிகளான எமது



கட்சியின் சகாக்கள் கேட்டுக்கொண்டால் அவர்களுக்காகவும் இந்த வழக்கில் முன்னிலையாகி கட்சிக்காக வாதாடுவேன் என்றார்.

விளம்பர
தொடர்புகளுக்கு
+94 777 163990

# தமிழரசுக் கட்சி மாநாட்டை நடத்த யாழ் மாவட்ட நீதிமன்றம் தடையுத்தரவு!

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்த யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் இன்று மதியம் தடையுத்தரவு விதித்துள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் தாக்கல் செய்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டது.

இதேவேளை, இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவதற்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றமும் இன்று இடைக்கால தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கச்சக்கொட்டித்தீவு - மாகமாறு வீதி காபட் இடும் பணி ஆரம்பம்.!

கிண்ணியா கச்சக்கொட்டித்தீவு - மாகமாறு வீதி காபட் இடும் பணி திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்யினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் இவ் வீதியில் பயணம் செய்யும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.









விளம்பர தொடர்புகளுக்கு +94 777 163990

# ஜனாதிபதி மற்றும் ஜெய்க்கா நிறுவன தலைவருக்கிடையிலான சந்திப்பு!



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) தலைவர் தனக்கா அகிஹிக்கோவிற்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றது.

குறித்த சந்திப்பானது நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிலையில், புதிய பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வது கடினமான செயலாக இருந்தாலும் இலங்கையில் பொருளாதார சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அர்ப்பணிப்பை தனக்கா அகிஹிக்கோ பாராட்டினார்.

எனினும், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புத் திட்டம், இலகு ரயில் திட்டம் மற்றும் மத்திய அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்ட ஜப்பானிய உதவியின் கீழ் இந்த நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை துரிதமாக மீள ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ரணில் விக்ரமசிங்க இங்கு தெரிவித்தார்.

இருப்பினும், கடந்த கால பொருளாதார நெருக்கடியின் போது, இலங்கைக்கு வழங்கிய தொடர்ச்சியான ஆதரவிற்காக ஜப்பானிய அரசாங்கம் மற்றும் ஜெய்கா விற்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

இலங்கையில் கடன் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க ஜெய்கா தயாராக இருப்பதாக அகிஹிட்டோ குறிப்பிட்டார்.

மேலும், இந்நிகழ்வில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் விவகார பணிப்பாளர் தினுக் கொழும்பகே ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# மீண்டும் விசாரணைக்கு வரும் கெஹலிய ரம்புக்வெல்லவின் வழக்கு!

சந்தேகத்திற்குரிய மனித இம்யூனோகுளோபுலின் மருந்து இறக்குமதி சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் இன்று எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது

இந் நிலையில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல நீதிமன்றில் ஆஜராகாததுடன், வழக்குடன் தொடர்புடைய 6 சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெ தற்போது சிறைச்சாலை வைத்தியசாலையில் தடுத்து வைக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த 2ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# முல்லைத்தீவில் சுகாதார தொழிற்சங்க நடவடிக்கை: சிரமத்தில் மக்கள்!




முல்லைத்தீவில் இடம்பெற்ற சுகாதார தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

வைத்தியர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள 35,000 ரூபாய் மேலதிக கொடுப்பனவு, தமக்கும் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி 72 சுகாதார தொழிற்சங்கங்கள் பல தடவைகளில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தன.

இந்த விடயம் தொடர்பில் நிதியமைச்சின் அதிகாரிகளுக்கும், சுகாதார தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முன் தினம் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை இடம்பெற்றிருந்தது.

இதன்போது குறித்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையிலேயே நேற்று காலை 6 மணி முதல் மீண்டும் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். நாடு பூராகவும் நடைபெறும் குறித்த பணிப்புறக் கணிப்பு நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து முல்லைத்தீவிலும் , இன்றைய தினம் இரண்டாவது நாளாக பணிபகிஸ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்திருந்ததோடு, இரத்த மாதிரிகளை பெறுதல் மற்றும் இரத்த பரிசோதனைகள், பற்சிகிச்சை பரிசோதனை என்பனவும் இன்று மேற்கொள்ளப்படாமையினால் பல நோயாளர்கள் திரும்பிச் சென்றதோடு மருந்துகளை பெறுவதிலும் பலர் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இதேவேளை தூர இடங்களில் இருந்து வந்த பல நோயாளர்கள் குறித்த பணிப்புறக்கணிப்பு காரணமாக திரும்பிச் செல்வதை அவதானிக்க கூடியதாக இருந்தது.



சண்முகம் தவசீலன்

# முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டம்!

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று (15.02.2024) பிற்பகல் 3.30 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அபிவிருத்தி குழு தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது

குறித்த கலந்துரையாடலில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந் பாராளுமன்ற உறுப்பினர்களது பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் இராணுவ அதிகாரிகள், அரச அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.குறித்த கலந்துரையாடலில் நெல்லுக்கான கட்டுப் பாட்டு விலை, நெல் அழிவுக்கான நட்ட ஈடு, யானை வேலி அமைத்தல், வீதி வேலைகள் , கல்வி சுகாதாரம் போன்ற பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்ததுடன் விரிவாக மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளதாக அபிவிருத்தி குழு தலைவரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.



சண்முகம் தவசீலன்

# தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும் வேட்பாளரைத் தெரிவிப்போம் : நாமல்!



தேர்தல் திகதி உத்தியோகப்பூர்வமாக அறிவிக் கப்பட்டதன் பின்னர் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் யார் என்பதை நாம் அறிவிப்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விட யம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசியலமைப்பின் பிரகாரம் இந்தவருட இறுதிக் குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தேர்தல் ஒன்று நடத்தப்படும் பட்சத்தில் கட்சி என்ற ரீதியில் அதற்கு தயாராக வேண்டும். ஆனால் ஒரு சிலர் தேர்தல் நடத்தப்படுவதை விரும்பவில்லை.

பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் நாம் ஒரு வேட்பாளரை முன்னிலைப்படுத்துவோம். கட்சி என்ற என்ற ரீதியில் நாம் தேர்தலுக்கு தயாராகவே உள்ளோம். வேட்பாளரை தெரிவு செய்வது மற்றும் கூட்டணி அமைப்பது தொடர்பாகவும் நாம் கலந்துரை யாடல்களை முன்னெடுத்து வருகின் றோம்.தேர்தல் திகதி உத்தியோகப்பூர்வமாக அறிவிக் கப்பட்டதன் பின்னர் பொதுஜன பெரமுன வின் வேட்பாளர் யார் என்பதை நாம் அறிவிப்போம்.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டு மக்கள் எதிர் நோக்கியுள்ள சவால்கள் மற்றும் நெருக்கடிக ளுகளுக்கு அரசாங்கம் என்ற ரீதியில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலேயே ஆராய வேண்டும்” என நாமல் ராஜபக்ஷ மேலும் தெரி வித்தார்.

# பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை தரம் உயர்த்தப்பட வேண்டும்!



"பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை தரம் உயர்த் தப்பட வேண்டும் என்ற எமது நோக்கத்திலேயே எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலை மையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் ஒப்பந் தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக” தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவர் வேலுசாமி இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் ஒப்பந்தம் கைசாத்திடும் நிகழ்விலே அவர் இத னைத் தெரிவித்தார்.

அத்துடன் பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதே தமது நோக் கம் எனவும், அவர்களுக்கு வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட வேண்டுமெனவும், அதற்காக ஒரு விசேட செயலணியை உருவாக்குவதற்கு சஜித் பிரேமதாச இணக்கம் தெரிவித்துள்ளார் என்றும் இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்துள்ளார்.

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!

021 222 7557

+94 77 149 9094

தேசியம் www.thesiyamnews.com THESIYAM

## அன்பான வாசகர்களுக்கு..!

தேசியம் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைகு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம். பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

E-mail : thesiyamnews@gmail.com | Whatsapp : +94 76 567 3339

# மாற்றுத்திறனாளிகளுக்கு சுயத்தொழில் உபகரணங்களை வழங்கிய செந்தில் தொண்டமான்!

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டலின் பேரில் சமூக சேவைகள் அமைச்சினால் மாற்றுத்திறனாளிகளை கௌரவிக்கும் நிகழ்வொன்று மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக சுயதொழில் உபகரணங்கள் பொழுதுபோக்கிற்காக தொலைக்காட்சி பெட்டிகளும் (LED)செந்தில் தொண்டமானால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், சாதனைகள் நிகழ்த்திய தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# அநுரகுமார ஜனாதிபதியானால் அழுத்தம் காரணமாக தற்கொலை செய்துகொள்வார்!

## திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பி!

ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெறும் பட்சத்தில் நாட்டை ஆள முடியாமல் தற்கொலை செய்துகொண்ட ஜனாதிபதியாக வரலாற்றில் இடம்பிடிப்பார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது, "ஜே.வி.பி. இரட்டை நிலைப்பாட்டைப் பின்பற்றி வருகின்றது என்பது தற்போது உறுதியாகின்றது. அக்கட்சியினரால் போலிக் கருத்துக்களே சமூகத்தில் விதைக்கப்படுகின்றன.

எனவே, உண்மையை சொல்லி நாட்டைப் பொறுப்பேற்குமாறும், பொய்களை நிறுத்துமாறும் நாம் கோருகின்றோம்.

இலங்கை வரலாற்றில் மன்னர்களுக்கு பிறகு, அழுத்தம் காரணமாக நாட்டை ஆள முடியாமல் ஓடிய தலைவர்தான் கோட்டாபய ராஜபக்ச. அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி ஆகமாட்டார் என்பது உறுதி. சிலவேளை கனவிலாவது அவர் ஜனாதிபதியானால் அழுத்தம் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்ட ஜனாதிபதியாக வரலாற்றில் இடம்பிடிப்பார். ஏனெனில் அவர் அந்தளவுக்கு பொய்யுரைக் கின்றார். அத்துடன், இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டு ஜே.வி.பியின் கொள்கைகளை அநுரகுமார திஸாநாயக்க காட்டிக்கொடுத்துள்ளார். "என தெரிவித்தார்.




விளம்பர தொடர்புகளுக்கு
+94 777 163990


# பொதுக் கூட்ட அறிவித்தல்.!

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி (DTNA)கூட்டணியில் அங்கம் வகிக் கும் கட்சிகளின் யாழ்,மாவட்ட இணை அமைப்பாளர்களுக்கான பொதுக் கூட்டம் இடம்பெறவுள்ளது.எனவே அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் பிரதி நிதித்து வப்படுத்தும் அனைத்து அமைப்பாளர்க ளும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வும்(1)இடம்:வடக்கு மாகாணசபையின் முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் அவர்களின் இல்லம் டச்சு வீதி முடிவுப் பகுதி இருபாலை.(2)காலம்:-17.02.2024,(3)நேரம் காலை 9.30 மணி.நிகழ்ச்சி நிரல்,(1)இரண்டு நிமிட மௌன வணக்கம்(2)எதிர் வரும் ஜனாதி பதி தேர்தல் தொடர்பாக கலந்துரையாடி கட்சியின் இணைத் தலைமைக்கு அறிக் கை சமர்ப்பித்தல்,(3)சமகால அரசியல் நிலைமை,(4)கட்சிகளின் யாழ் மாவட்ட அனைத்து அங்கத்தவர்கள் மற்றும் ஆதர வாளர்கள் என குறைந்தது இரண்டாயிரம் பேரையாவது அழைத்து ஒன்று கூடலை யும் கருத்தரங்கையும் நடாத்துதல். (5)ஒன்று கூடலுக்கான ஏற்பாட்டு குழுவை அமைத்தல்.(6)மேற்படி ஒன்று கூடலை இவ் வருட மாசி மாத முடிவு மட்டில் நடாத்த, திகதியினை தீர்மானித்தல்.நன்றி ந.விந்தன் கனகரட்னம்,இணைப்பாளர், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி,யாழ் மாவட்டம்.

# நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டத்தினை பார்வையிட்டார் எம்.எஸ். தௌபீக்..!

திருகோணமலை மாவட்ட குடிநீர் பிரச்சினையை தீர்க்கும் முகமாக குச்சவெளி பள்ளவக்குளம் பிரதேசத்தில் திருகோணமலை மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்யின் வேண்டு கோளிற்கிணங் சமூக நீர்வழங்கள் திணைக் களத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமைக்கப் பட்டுவரும் நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை (RO Plant) பாராளுமன்ற உறுப்பினர்பார்வையிட்டார். இதன்போது, இவ் அபிவிருத்தி திட்டம் தொடர்பாக பிரதேச மக்களிடம் கலந்துரையாடப்பட்டது.






# உடனடி வேலைவாய்ப்பு

வடக்கு மாகாணம் முழுவதும் தேசியம் வாராந்த பத்திரிகையை விநியோகம் செய்வதற்கு ஆண்/ பெண் இருபாலரும் தேவை

தொடர்புகளுக்கு:

077 716 3990-076 567 3339

# காணி விற்பனைக்கு

## புத்தூர் மட்டுவில்

### பிரதான வீதியில்.

**2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.**

**2 பரப்பு - 5,50,000/=**

**20 அடி பாதையுடன்.**

- யாழ் மத்திய பொருளாதார சந்தைக்கு அருகாமையில் காணி அமைந்துள்ளது.
- ஆலையங்கள் மற்றும் வைத்தியசாலை, பாடசாலைகளும் அருகாமையில் உள்ளது.

- நன்னீர் நிலம்,
- மேட்டு நிலம்,
- மின்சார வசதியும் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு :

**076 10 98 504, 074 26 00 617**

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |

# SMART TECH SOLUTION





உங்கள் வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும். சிறந்த வாடிக்கையாளர் சேவை அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் CCTV installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

**Our Services:**
CCTV sales & Installation / Alarm system
Door Lock /Finger Print Attendance /Electric Fence / Local Networking / Computer Repair & Maintenance / Software Development



CCTV பொருத்துனர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Contact us for More Information
+94 77 684 3023

+94 71684 3023 / +94 21221 3023
No: 282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk

**தேசியம்** பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road,
Jaffna.Tel : 021 222 7557

SCAN ME